உ

சிவமயம்



# கூட்டுப் பிரார்த்தனைப் பாடல்கள்

தொகுப்பு

சின்னத்தம்பி பத்மராஜன்

-வெளியீடு-

இந்து இளைஞர் அறிவியற் கழகம்

அல்வாய்

18- 10- 1997

உ

சிவமயம்

அல்வாய் சாமணந்தறை ஆலடிப்
பிள்ளையார் கோயிற் பரிபாலன சபையின்
அனுசரணையுடன

# இந்து இளைஞர் அறிவியற் கழகம்
வெள்ளிதோறும் நிகழ்த்தும்
கூட்டுப்பிரார்த்தனைக்குரிய

# பாடல்களின் தொகுப்பு

-தொகுத்தவர்-

சின்னத்தம்பி பத்மராஜன்
[இயக்குநர், இந்து இளைஞர் அறிவியற்கழகம்]

வெளியிட்டோர்:-
சமயத்துறை
இந்து இளைஞர் அறிவியற்கழகம்
அல்வாய்.

குருவின் ஆசியுடன் நுழைவோம்!

# அருள் ஆசி

அம்பிகையின் அருட்குமாரர் விநாயகப் பெருமானின் திருவருளை முன்னிட்டு:

திருவருள்மிகு அல்வாய் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் பாலகணபதி தத்துவத்தைப் பெற்றவர் அத்துடன் ஞானியின் திருவருட் தியானத்தை முழுமையாகப் பிரகாசிப்பவர். இயான மூதிர்வுக்கு திருமுறை ஓதுதல், கூட்டுப்பிரார்த்தனை செய்தல் சாலப்பொருத்தமானது. பழம்பெரும் பெருமையுடைய இந்த ஆலயத்தில் புதுப்பொலிவைத்தருவது 'இந்து இளைஞர் அறிவியற்கழகம்' ஆகும். இக்கழகத்தின் வெற்றிநடையில் மிளிர்வது ஆத்மபயிருக்குரியதான 'கூட்டுப்பிரார்த்தனை' என்ற நூலாகும். இந்நூலில் ஆலடி ஐங்கரன் கீர்த்தனை, பிள்ளையார், சக்தி, முருகன் ஆகிய தெய்வங்களுக்கான தோத்திரப் பாராயணப் பாடல்கள், திருப்புகழ், மங்களவாழ்த்து போன்ற அம்சங்கள் இடம்பெற்றிருப்பது கண்டு இன்புறுகின்றேன்.

இந்து இளைஞர் அறிவியற் கழகமும், அதன் இயக்குநரும், அலுவலர்களும் பக்தி இன்பவெள்ள

தைப் பெற்று இனிது பல வள சேவைகளைச் செய்ய வேண்டுமென்றும் அவர்கள் எல்லவர்க்கும் அல்வாய் ஆலடி ஐங்கரப் பெருமானின் திருவருள் கிடைக்க வேண்டுமென்றும் மனம், மொழி, மெய்யால் தினமும் உள்ளன்புடன் வாழ்த்திப் பணிகின்றேன்.

இளைய தலைமுறையினர், சிறார்கள், மற்றோர்கள், ஆர்வலர் அனைவரும் பயன் பெறுக என்று வாழ்த்தி அருள் ஆசி கூறுகின்றேன்.

'சுபமஸ்து'

இங்ஙனம்
இறையன்பு வேண்டும்
சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்
ஷெ ஆலய பிரதமகுரு

அருள் வேண்டும் பரிபாலன சபை......!

## ஆலடியான் அருள் நிறைக

அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயிலின் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வு ஐம்பதுவருட கால நீண்ட வரலாற்றை உடையது. காலச் சூழ்நிலை காரணமாக தளர்வுற்றிருக்கும் இந்நிகழ்வை மீண்டும் உற்சாகமாக நடாத்த முன்வந்திருக்கும் அல்வாய் இந்து இளைஞர் அறிவியற் கழகத்தின் முயற்சிகளுக்கு ஆலடியான் அருள் என்றும் சித்திக்க வேண்டுமென இறைஞ்சுகின்றேன்.

த. கலாமணி
தலைவர்,
பரிபாலன சபை
அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில்

## பாடும் பணியே பணியாய் அருள்வாய்

எமது இந்து இளைஞர் அறிவியற் கழகம் 1994ம் ஆண்டு தொடக்கம் அல்வாய் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் கோயில் உற்சவகாலத்தில் மாணவர்களிடையே சமயரீதியான அறிவு, பேச்சு, பண்ணிசைப் போட்டிகளை அடியார்களின் ஆதரவுடனும் பரிபாலன சபையின் அனுசரணையுடனும் நடத்தி வருவது யாவரும் அறிந்ததே; கழகத்தின் சமயப் பணிகளின் தொடரில் வாராந்த வெள்ளிகூட்டுப்பிரார்த்தனையை 1997 ஆவணி மாதம் சதுர்த்தி தினத்தில் ஆரம்பித்து சிறப்பாக நடத்திவருவதும் தெரிந்ததே; தொடர்ந்து கழகத்தின் முதலாவது வெளியீடாக ''கூட்டுப் பிரார்த்தனைப் பாடல்களின் தொகுப்பு'' என்ற சிறிய இதழை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இதற்கு அருள் பாலித்த ஆலடிவாழ் பாலகணபதியைத் தாள் பணிந்து வணங்குகிறேன். நீண்ட காலமாகத் தடைப்பட்டிருந்த கூட்டுப்பிரார்த்தனையை மீண்டும் எமது கழகம் ஆரம்பித்து நடத்திவரும் இன்றைய பொழுதில் பாடல்களை நெறிப்படுத்தி வருகின்ற கழக மாணவர்களாகிய செல்வன் வி. செந்தூரன், செல்வன் வீ. இவ்வியநாதன், கழக நிர்வாக அலுவலர் செல்வன்

சி) செளசிகன் துணை நிர்வாக அலுவலர் செல்வன் செ. சுதாகரன், சமயத்துறை அலுவலர் திரு செ. அட் ஜெயலிங்கம் ஏனைய துறை அலுவலர்கள், கழக வளர்ச் சிக்கு ஆதரவு தரும் பெரியோர்கள், இளைஞர்கள், தாய்மார்கள், மாணவர்கள், கள அலுவலர்கள் அனைவ ரும் வழங்கிவருகின்ற ஒத்துழைப்பும் ஆதரவும் தொடர இறையருள் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின் றேன் மேலும் வெள்ளிதோறும் நடைபெறும் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வில் மாணவர்களும் அடியார்களும். கலந்து இறையருள் பெற்று வளமான வாழ்வுபெற அன்புடன் வேண்டுகிறேன்.

'நல்லதைச் செய்வோம்; நல்லவராய் வாழ்வோம்''

என்றும் பணியில்
சின்னத்தம்பி பத்மராஜன்
இயக்குநர்,
இந்து இளைஞர் அறிவியற் கழகம்,
அல்வாய்.

''தவமஹால்''
அல்வாய்.
18-10-1997

---

இந்து இளைஞர் அறிவியற் கழகம்
அல்வாய்

சேவை ஆரம்பிக்கப்பட்ட நாள் 01-09-1994

திருச்சிற்றம்பலம்

ஆலடி மேவிடும் ஐங்கரனே - அருள்வாயே
என்றும் துணை நீயே - எங்கள் (ஆலடி)
நீலகண்டனின் மகனே நிர்மலசொரூபனே
நினைத்த பொழுதினில் வாராய் நீயே! (ஆலடி)
நீர்க்குமிழி போன்ற வாழ்க்கையிலே நின்று
நெஞ்சம் தடுமாறி நினை மறந்தேனே
யாரெனக்கு இன்று ஆறுதலை அளிப்பார்
அல்வைப்பகுதி தனுக்கு அருள் புரிவாயே! (ஆலடி)

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகணபதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே

தொந்திக் கணபதி வா வா வா
வந்தே ஒருவரம் தா தா தா
கந்தனின் அண்ணா வா வா வா
கனிவுடன் ஒரு வரம் தா தா தா

ஆனைமுகத்துடன் வா வா வா
அவசியம் ஒரு வரம் தா தா தா
பானைவயிற்றுடன் வா வா வா
பணிந்தேன் ஒரு வரம் தா தா தா

எல்லாமறிந்த கணபதியே
எவ்வரம் கேட்பேன் தெரியாதா
நல்லவன் என்னும் ஒரு பெயரை
நான் பெற நீ வரந் தா தா தா (தொந்தி)

ஜெயகணேச ஜெயகணேச ஜெயகணேச ஓடிவா
ஸ்ரீகணேச ஸ்ரீகணேச ஸ்ரீகணேச ஆடிவா
ஜெயகணேச மங்களங்கள் தங்கிடவே ஓடிவா
ஸ்ரீகணேச மாண்புடனே நாங்கள் வாழ ஆடிவா
ஜெயகணேச அன்புநிலை தங்கிடவே ஓடிவா
ஸ்ரீகணேச இன்பநிலை ஓங்கிடவே ஆடிவா
ஜெயகணேச நெஞ்சக்கனல் நெகிழ்ந்திடவே ஓடிவா
ஸ்ரீகணேச வஞ்சப்பகைகள் நீங்கிடவே ஆடிவா
(ஜெயகணேச)

அம்மா தாயே கலைவாணி
நீ என் நாவைக் காப்பாயே
இம்மா நிலத்தின் இனிமையெல்லாம்
இருக்குது நாவின் அசைவினிலே
(ஓம் அம்மா தாயே)

சும்மா இருக்கத் தெரியாது
சுகத்தைச் சொன்னால் விளங்காது
தம்மா லென்றே தடுமாறும்
இத்தரணியை ஆண்டிட வேண்டுமடி
(ஓம் அம்மா தாயே)

ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் பராசக்தி
ஓம் பராசக்தி ஓம் பராசக்தி ஓம் பராசக்தி

சொல்லுக்கடங்காவே - பராசக்தி
சூரத்தனங்களெல்லாம்
வல்லமை தந்திடுவாய் - பராசக்தி
வாழி என்றே துதிப்போம் (ஓம் சக்தி ஓம்)

செல்வத்திருமகளைத் திடங்கொண்டு
சிந்தனை செய்திடுவோம்
செல்வமெல்லாம் தருவாள் நமதொளி
திக்கனைத்தும் பரவும் (ஓம் சக்தி ஓம்)

தாமரைப்பூவினிலே சுருதியைத்
தனியிருந்திசைப்பாள்
பூமணித் தாளினையைக் கண்ணிலொற்றி
புண்ணியம் செய்திடுவோம் (ஓம் சக்தி ஓம்)

ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்

சுந்தரவதனி சுகுண மனோகரி
மந்தகா சமுக மதிவதனி
சந்தன குங்கும அலங்காரமுடனே
தந்திடுவாய் உந்தன் தரிசனமே - ஓம் சக்தி

நந்திதேவருடன் முனிவரும் பணிய
ஆனந்தமுடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயன் அயனுடன்
வகையாய் உன்புகழ் பாடிடவே - ஓம் சக்தி

தங்கச்சிலம்பு சலசல வென்றிடத்
தாண்டவமாடித் தனயன் மகிழ்ந்திட
பொங்கும் ஆனந்தமுடன் புலிமேல் விளங்கும்
மங்களநாயகி மகிழ்வாய் வருவாய் - ஓம் சக்தி

வேதங்கள் உன்னை வேண்டிப் பாடிட
விரும்பிச் சரஸ்வதி வீணை வாசித்திட
சதானந்தமான ஜோதீஸ் வரூபி
ராஜராஜேஸ்வரி சரணம் சரணம் - ஓம் சக்தி

ஜெய ஜெய சக்தி - ஓம் ஸ்ரீ
ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெயவென தினம் பாடிப்பணிந்தோம்
ஜெக மெங்கும் அமைதியைத்தா (ஓம் ஸ்ரீ)

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவையெல்லாம் அகல – அம்மம்மா
தேவையெல்லாம் அகல
பக்திபெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பில் எம்மை (ஓம் ஸ்ரீ)
இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈஸ்வரி வரம் அருள்வாய் - அம்மம்மா
ஈஸ்வரி வரம் அருள்வாய்
கரங்குவித்தோம் இனி காலைவிடோமடி
கருணையுடன் அணைப்பாய் (ஓம் ஸ்ரீ)

காசினி எங்கும் வேற்றுமை போக
கருத்தினுள் அன்பருள்வாய் அம்மம்மா
கருத்தினுள் அன்பருள்வாய்
தேகூடன் வாழ காட்டடி காட்சி
தேவி உன் அடைக்கலம் நாம் (ஓம் ஸ்ரீ)

நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான
நல்லொளிர் தீபம் வைத்து – அம்மம்மா
நல்லொளிர் தீபம் வைத்து
நமஸ்காரம் செய்து ஆரத்தி செய்தோம்
ஞாலத்தில் அமைதியைத் தா (ஓம் ஸ்ரீ)

அன்பருக்கு அன்பனே நீ வா வா முருகா
ஆறுபடை வீடுடையாய் வா வா முருகா
இன்பமய ஜோதியே நீ வா வா முருகா
ஈசனுமை பாலகனே வா வா முருகா
உலகநாதன் மருமகனே நீ வா வா முருகா
ஊமைக்கருள் புரிந்தவனே வா வா முருகா
எட்டுக்குடி வேலவனே வா வா முருகா
ஏறுமயில் ஏறியே நீ வா வா முருகா

ஐங்கரனுக் கிளையவனே வா வா முருகா
அகிலலோக நாயகனே வா வா முருகா
ஒய்யாரி வள்ளிலோலா வா வா முருகா
ஓங்கார தத்துவனே வா வா முருகா
ஔவைக்குப தேசித்தவா வா வா முருகா
அகிலலோக நாயகனே வா வா முருகா
ஆடி வா நீ ஆடி வா நீ வா வா முருகா
ஓடிவா நீ ஓடிவா நீ வா வா முருகா

ஹர ஹரோஹரா சுவாமி ஹர ஹரோஹரா
ஹர ஹரோஹரா சுவாமி ஹர ஹரோஹரா
கதிர்காமவேலனுக்கு ஹர ஹரோஹரா
கந்தப்ப சுவாமிக்கு ஹர ஹரோஹரா
திருப்பரங்கிரித் தீரனுக்கு ஹர ஹரோஹரா
திருச்செந்தூர்த் தேவனுக்கு ஹர ஹரோஹரா

திருப்பழனிச் செல்வனுக்கு ஹர ஹரோஹரா
திருவேரகப் பாலனுக்கு ஹர ஹரோஹரா
குன்றிலாடும் குமரனுக்கு ஹர ஹரோஹரா
குஞ்சரிதன் கணவனுக்கு ஹர ஹரோஹரா
குறவள்ளிக் காந்தனுக்கு ஹர ஹரோஹரா
குணங்கடந்த கோலனுக்கு ஹர ஹரோஹரா
சோலைமலைக் கிழவனுக்கு ஹர ஹரோஹரா
சொக்கக்கார முருகனுக்கு ஹர ஹரோஹரா
அகங்கார நாசனுக்கு ஹர ஹரோஹரா
அன்பர்களின் நேயருக்கு ஹர ஹரோஹரா
ஓங்கார தத்துவற்கு ஹர ஹரோஹரா
ஓம் சக்தி தந்தவற்கு ஹர ஹரோஹரா
(ஹர ஹரோஹரா சுவாமி)

நெஞ்சக் கனகல் நெகிழ்ந்துள்ளுருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக் கரவானைபதம் பணிவோம்.

ஆடும் பரிவே லணி சேவலெனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே.

எந்தாயு மெனக் கருதந்தையும் நீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே உமையாண்
மைந்தா குமரா மறைநா யகனே.

உருவா யருவா யுவதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே

சரணகம லாலயத்தை அரைநிமிட நேரமட்டில்
தவமுறை தியானம் வைக்க அறியாத
சடகசட முடமட்டி பவவினையி லேசணித்த
தமியன்மிடி யால் மயக்கம் உறுவேனோ
கருணைபுரி யாதிருப்பதென குறையிவேளை செப்பு
கயிலைமலை நாதர் பெற்ற குமரோனே
கடகபுய மீதிரத்ன மணியணி பொன் மாலைசெச்சை
கமழுமண மார் கடப்பம் அணிவோனே

தருணமிதை யாமிகுந்த கணமதுறு நீள்சவுக்ய
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
உதவி புரிய வேணுநெய்த்த வடிவேலா

அருணதன பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா
அதிசயம நேகமுற்ற பழநிமலை மீதுதித்த
அழகதிரு வேரகத்தின் முருகோனே.

கைத்தல நிறைகனி அப்புமொடவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணி
கற்றிடும் அடியவர் புத்தியிலுறைபவர்
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகள்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படுகிரி தனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரி செய்த அச்சிவனுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிரமணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடனச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

நாராயணா ஹரி நாராயணா
நாராயணா ஹரி நாராயணா
நாராயணா ஹரி ஓம் நாராயணா
நாராயணா ஹரி ஓம் நாராயணா

கீதையின் பொருளே நாராயணா
கிருஷ்ண பகவானே நாராயணா
பாற்கடல் பள்ளிகொள்ளும் நாராயணா
பரந்தாம கிருஷ்ணா நாராயணா
(நாராயணா)

வேங்குழல் மன்னா நாராயணா
வெங்கடேஷ்வரனே நாராயணா
குன்றத்தை ஏந்திய நாராயணா
குளிர்மழை காத்த நாராயணா
(நாராயணா)

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெலாம்,

நோக்கமொரு தீட்சையென
நூலுரைக்கும் பாங்கினிலே
ஆக்கமெல்லாம் நாமடைய
ஆலடியில் - மீக்குயரும்

கோயிலுறைந்தூர் முழுதும்
கூர்விழியால் பார்ப்பவனை
வாயினால் நாள்தோறும் வாழ்த்து.

ஆனைமுகன் ஆறுமுகன்
அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு.

நமப்பார்வதீ பதயே
அரஹர மஹா தேவா
தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.

திருச்சிற்றம்பலம்

**

இந்து இளைஞர் அறிவியற் கழகம்
அல்வாய்.

*
*
*
*   *   *
*  *  *
***

# சமயத்துறை சார்ந்த சேவைகளுக்கு தொடர்பு கொள்ளவும்-

**திரு. செ. அட்ஜெயலிங்கம்**
*சமயத்துறை அலுவலர்,*
*இந்து இளைஞர் அறிவியற் கழகம்.*
*அல்வாய்.*

---

—நன்றே செய்; அதனை இன்றே செய்—

---

# கூட்டுப் பிரார்த்தனை
# தரும் பயன்கள்

- ★ மன அமைதி
- ★ சமூக ஒற்றுமை
- ★ ஆத்ம இன்பம்
- ★ பாடுந் திறன்
- ★ ஒழுக்கம், பணிவு
- ★ உடல்-உள ஒத்துழைப்பு
- ★ மனம் ஒருமுகப்படல்
- ★ நல்லதைச் சிந்தித்தல்

↓

சமயத்துறை,
இந்து இளைஞர் அறிவியற் கழகம்,
அல்வாய்.

தமிழ்ப்பூங்கா அச்சகம் — நெல்லியடி.